க.பொ.த.(சாதாரண தர)ப் பரீட்சை - 2019

சைவநெறி

மாதிரி வினாத்தாள் - 1

சைவநெறி I

கவனிக்க:

1. எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
2. 1 தொடக்கம் 40 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

---

01). 'கற்றவர் விழுங்கும் கற்பகக் கனி....' எனும் பாடலில் குறிப்பிடப்படுபவர்

1. பராசக்தி 2. முருகன் 3. வருணன் 4. சிவன்

02). 'வான சாஸ்திர ஆய்வின் படி முதல் பஞ்சாங்கத்தைக் கணித்தவர்

1. ஆரியப்பட்டர் 2. வராகமிகிரர்
3. வரதபண்டிதர் 4. தேனுவரைப் பெருமாள்

03). சூரன் போர் எனும் சமய நிகழ்வு இடம்பெறும் விரத காலம்

1. வரலக்சுமி விரதகாலம் 2. கந்தசஷ்டி விரதகாலம்
3. சதுர்த்தி விரதகாலம் 4. சிவராத்திரி விரதகாலம்

04). 'விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்...' என திருக்கார்த்திகை விரதத்தின் சிறப்பைப் போற்றியவர்

1. காரைக்காலம்மையார் 2. திருஞானசம்பந்தர்
3. திருநாவுக்கரசர் 4. மாணிக்கவாசகர்

05). 'பூசைகளும் நற்செயல்களும் ஆன்மாக்களை நரகத்தினின்றும் காக்கும்' எனத் தீபாவளிப் பண்டிகையை சிறப்பிக்கும் புராணம்

1. சிவபுராணம் 2. பத்மபுராணம் 3. வாயு புராணம் 4. ஆக்னேய புராணம்

06). பூர்வக் கிரியையினுள் அடங்குவன

1. அஸ்தி சஞ்சயனம், மகாளயம் 2. கர்ண வேதனம், நாமகரணம்
3. கர்ண வேதனம், அஸ்தி சஞ்சயனம் 4. ஆண்டுத் திவசம், சிரார்த்தம்

07). குமரகுருபரர் பாடிய நூல்கள்

1. கயிலைக் கலம்பகம், கந்தர் கலிவெண்பா 2. கந்தரனுபூதி, கந்தபுராணம்
3. மீனாட்சி பிள்ளைத் தமிழ், திருவகுப்பு 4. கந்தரந்தாதி, கந்தரலங்காரம்

08. 'காயத்திரி மந்திரம்' அமைந்துள்ள வேதம்

1. சாம வேதம் 2. யசுர் வேதம் 3. இருக்கு வேதம் 4. அதர்வ வேதம்

09. வேதாந்தம், வேதசிரசு என அழைக்கப்படுவது

1. ஆரணியங்கள் 2. சங்கிதைகள் 3. பிராமணங்கள் 4. உபநிடதங்கள்

10). ‘தொன்று தொட்டு வரும் அறிவு’ எனப் பொருள் தரும் நூல்

1. ஆகமம் 2. வேதம் 3. புராணம் 4. இதிகாசம்

11). கச்சியப்ப சிவாசாரியாரோடு தொடர்புடைய ஆலயம்

1. காஞ்சி கைலாசநாதர் 2. காஞ்சி குமரகோட்டம்
3. காஞ்சி வைகுந்தப் பெருமாள் 4. காஞ்சி ஏகாம்பர நாதர்

12). கையில் எடுத்த பூவுடன் முருகன் காட்சி கொடுத்த திருத்தலம்

1. திருப்பரங்குன்றம் 2. திருத்தணிகை 3. திருவேரகம் 4. திருச்செந்தூர்

13). பிரமோற்சவம் எனப்படுவது,

1. குடமுழுக்கு 2. மகாமகம் 3. மகோற்சவம் 4. பிரதிஷ்டை

14). கும்பாபிஷேகம் முடிவுற்ற பின் மூல விக்கிரகத்திற்கு செய்யப்படும் அபிஷேக அலங்காரங்களைச் சுட்டுவது,

1. மண்டலாபிஷேகம் 2. மகா அபிஷேகம் 3. குடமுழுக்கு 4. கலாகர்ஷணம்

15. திருக்கூட்டச் சிறப்பில் சிறப்பிக்கப்படுபவர்

1. சிவனடியார்கள் 2. முனிவர்கள் 3. இறைவன் 4. தேவர்கள்

16). திருவீரட்டானேஸ்வரத்தில் சரியைத் தொண்டாற்றிய பெண் அடியவர்

1. இசை ஞானியார் 2. மங்கையற்கரசியார்
3. காரைக்காலம்மையார் 4. திலகவதியார்

17). திருஞானசம்பந்தரால் சைவத்திற்கு மதம் மாற்றப்பட்ட இருவரின் பெயர்கள் அடங்கிய தொகுதி

1. கூன்பாண்டியன், குலச்சிறையார் 2. புத்த நந்தி, கூன்பாண்டியன்
3. புத்தநந்தி, மகேந்திரவர்மன் 4. கூன்பாண்டியன், மகேந்திரவர்மன்

18). சுந்தர மூர்த்தி நாயனார் முத்தி அடைந்த தினம்

1. வைகாசி மூலம் 2. சித்திரைச் சதயம் 3. ஆடிச்சுவாதி 4. ஆனிமகம்

19). ‘தென்னவன் பிரமராயன்’ எனும் பட்டத்தை மாணிக்கவாசகருக்கு வழங்கியவர்

1. சேக்கிழார் 2. அரிமர்த்தன பாண்டியன்
3. சிவபெருமான் 4. விஜயரங்க சொக்கநாதர்

20). திருமந்திரத்தில் சிவலிங்க, சிவனடியார் வழிபாடு பற்றி விளக்கமாகக் கூறும் தந்திரம்

1. 9ம் தந்திரம் 2. 5ம் தந்திரம் 3. 3ம் தந்திரம் 4. 7ம் தந்திரம்

21). சுவாமி விபுலாநந்தரின் இயற்பெயர், துறவுப்பெயர் என்பன முறையே

1. மயில்வாகனன், பிரபோதசைதன்யர் 2. ஆறுமுகம்பிள்ளை, மயில்வாகனன்
3. மயில்வாகனன், வீரத்துறவி 4. பிரபோத சைதன்யர், மயில்வாகனன்

22). வில்லிபுத்தூரரை வாதில் வென்றவர்

1. நக்கீரர் 2. வேதவியாசர் 3. அருணகிரிநாதர் 4. கச்சியப்பர்

23). களுதாவளைப் பிள்ளையார் ஆலயத்தின் தல விருட்சம்

1. வன்னி 2. வில்வம் 3. வேம்பு 4. அரசு

24). 'மதங்கசூளாமணி' எனும் நாடக நூலை இயற்றியவர்

1. விபுலாநந்தர் 2. ஆறுமுகநாவலர்
3. சேர் பொன்.இராமநாதன் 4. விவேகானந்தர்

25). மனம், வாக்கு காயம் என்பவை

1. அந்தக்கரணங்கள் 2. முப்பொருள்கள் 3. திரிகரணங்கள் 4. மும்மலங்கள்

26). ஆகந்துக மலம் எனப்படுபவை

1. கன்மம், மாயை 2. ஆணவம், கன்மம்
3. மாயை, ஆணவம் 4. ஆணவம், கன்மம், மாயை

27). வித்தியா தத்துவங்கள் அடங்கும் தொகுதி

1. நியதி, கலை, வித்தை, அகங்காரம் 2. மனம், புத்தி, சித்தம், அகங்காரம்
3. காலம், நியதி, சித்தம், அகங்காரம் 4. காலம், நியதி, கலை, வித்தை

28). திரிமலத்தார் எனப்படுபவர்

1. பிரளயாகலர் 2. சகலர் 3. விஞ்ஞானகலர் 4. முத்தர்

29). திருவருட்பயனில் இறைவனுடைய மேலான தன்மையை விளக்குவது

1. உயிரவை நிலை 2. இருண்மல நிலை 3. அருளுரு நிலை 4. பதிமுது நிலை

30). சங்கம வழிபாட்டால் முத்தியடைந்தோர்

1. சிறுத்தொண்டர், இளையான்குடிமாற நாயனார் 2. பூசலார், சாக்கிய நாயனார்
3. மங்கையற்கரசியார், குலச்சிறையார் 4. சாக்கிய நாயனார், குலச்சிறையார்

31). இராமாயணத்தில் குறிப்பிடப்படும் இலங்கை வேந்தன்

1. இராமதாஸர் 2. ஆஞ்சநேயர் 3. இராமன் 4. இராவணன்

32). வைரவருக்குரிய விஷேட தினமாக அமைவது

1. கார்த்திகைப் பரணி 2. ஐப்பசிப் பரணி
3. வைகாசிப் பரணி 4. மார்கழிப்பரணி

33). இலங்கையில் நிலவிய சைவசமயத்தின் தொன்மையை அறிய உதவும் இலக்கிய சான்றுகள்

1. வேதம், ஆகமம் 2. இராமாயணம், வேதம்
3. இராமாயணம், மகாபாரதம் 4. மகாபாரதம், ஆகமம்

34). இலங்கையில் மிக உயரமான கொடித்தம்பம் உள்ள ஆலயம்

1. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம் 2. ஒட்டுசுட்டான் தான்தோன்றீச்சரம்
3. முன்னேச்சரம் 4. நகுலேச்சரம்

35). கி.பி.1621 இல் நல்லூர் ஆலயத்தை அழித்த போர்த்துக்கேயத் தளபதி

1. குவேரோஸ் 2. பிலிப் தெ ஒலிவெறா 3. பிரட்றிக் நோர்த் 4. அசவிடோ

36). ‘இந்துசாதனம்’ எனும் பத்திரிகையை வெளியிடும் சைவ சமய நிறுவனம்

1. சைவவித்தியா விருத்திச் சங்கம்
2. கொழும்பு விவேகானந்த சபை
3. சைவபரிபாலன சபை
4. இராமகிருஷ்ண மிஷன்

37). ‘அன்பின் வழியது உயிர் நிலை’ எனக் கூறும் நூல்

1. திருமந்திரம்
2. திருக்குறள்
3. ஆத்திசூடி
4. கொன்றைவேந்தன்

❄ கீழே தரப்பட்ட அட்டவணையில் A இலிருந்து I வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 38 – 40 வரையான வினாக்களுக்கான விடைகளைத் தெரிவு செய்க.

| புறச்சந்தான குரவர் | நூல்கள் | முத்தியடைந்த தினம் |
|---|---|---|
| A. மெய்கண்ட தேவர் | D. கோயிற் புராணம் | G. புரட்டாதி பூரம் |
| B. அருணந்தி சிவாசாரியார் | E. இருபா இருப∴து | H. ஐப்பசி சுவாதி |
| C. உமாபதி சிவாசாரியார் | F. சிவஞானபோதம் | I. சித்திரை அத்தம் |

38). சித்தாந்த அட்டக ஆசிரியரோடு தொடர்புடையது

1. C D H
2. C E I
3. C D I
4. A F H

39). பரஞ்சோதி முனிவரின் மாணாக்கரோடு தொடர்புடையது

1. B F H
2. A F I
3. C D G
4. A F H

40). சகலாகம பண்டிதரோடு தொடர்புடைய தொகுதி

1. B E G
2. C E H
3. A E G
4. A E I

## சைவநெறி II

- முதலாம் வினாவும் இரண்டாம் வினாவும் உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.
- முதலாம் வினாவுக்கு 20 புள்ளிகளும் ஏனைய வினாக்களுக்கு 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

---

01. மேல்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக

I. இறைவனின் உருவத் திருமேனிகள் எவை?

II. ‘ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்…….’ என வித்தியாதானம் பற்றிக் கூறியவர் யார்?

III. பஞ்சாங்கம் குறிப்பிடும் அயனங்கள் எவை?

IV. திருமணச் சடங்கில் ‘உடலாலும் உள்ளத்தாலும் நாமிருவரும் ஒருவர்’ என்ற தத்துவத்தை உணர்த்தும் கிரியை எது?

V. மகோற்சவக் கிரியைகளில் தீர்த்தோற்சவம் ஐந்தொழில்களில் எதனைக் குறிக்கின்றது?

VI. சைவ சமயத்தவர் கடைப்பிடிக்க வேண்டிய விழுமியப் பண்புகள் இரண்டு தருக.

VII. சரசோதிமாலை எனும் சோதிட நூலை எழுதியவர் யார்?

VIII. ஈழத்தில் அழிந்துவரும் கூத்துக் கலைக்கு மறுவாழ்வு அளித்தவர் யார்?

IX. இலங்கையில் நித்திய அன்னதானப் பணி இடம்பெறும் ஆலயங்கள் இரண்டு தருக.

X. சைவபரிபாலன சபையின் நோக்கங்கள் இரண்டு தருக.

(10x2=20 புள்ளிகள்)

02. I. மேல்வரும் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக

II. அவற்றின் பொழிப்புரையை எழுதுக.

அ. ‘‘அங்கமும் வேதமும்…………….’’

ஆ. ‘‘தந்ததுன் தன்னை…………………’’

இ. ‘‘தண்ணளி வெண்குடை………………’’

ஈ. ‘‘ஆத்தாளை எங்கள்………………’’

உ. ‘‘உண்ணுஞ் சோறு…………………..’’

03. ‘‘விழுமியங்கள் மனித வாழ்வை மேம்படுத்துவன’’

I. ஒப்புரவு எனப்படுவது யாது?

II. ஒப்புரவால் உயர்ந்த இருவரின் பெயரைக் குறிப்பிடுக.

III. ஈகை பற்றிச் சுருக்கமாக விளக்குக.

04. ‘‘அரந்தை தீர்க்கும் அடியவர் மேனிமேல்
நிரந்தர நீற்றொளி யால் நிறை தூய்மையால்
புரந்த அஞ்செழுத் தோசை பொலிதலாய்
பரந்த ஆயிரம் பாற்கடல் போல்வது’’ (பெரிய புராணம்)

I. பெரிய புராணம் இடம்பெறும் திருமுறை எது? அதன் ஆசிரியர் யார்?

II. திருக்கூட்டச் சிறப்பில் கூறப்பட்டுள்ள சிவனடியார்களின் பெருமைகள் மூன்றினைத் தருக.

III. இப்பாடலில் கூறப்பட்டுள்ள கருத்தினை உமது உரைநடையில் எழுதுக.

05. ‘‘ஆன்மீகத்தை மேம்படுத்துவதில் விரதமும் ஒரு சாதனமாகும்’’.

I. விரதம் என்பதற்கு ஆறுமுக நாவலர் கூறும் வரைவிலக்கணம் யாது?

II. வரலட்சுமி விரதத்தின் நியதிகள் மூன்றினைத் தருக.

III. திருவாதிரை விரதத்தின் சிறப்புக்களைச் சுருக்கமாக விளக்குக.

06. ‘‘ஐந்தாம் குரவராகப் போற்றப்படுபவர் ஆறுமுநாவலர்’’

I. ஆறுமுகநாவலர் நல்லூரில் நிறுவிய அச்சியந்திர சாலை எது?

II. ஆறுமுக நாவலரின் சமூகப்பணிகள் மூன்று தருக.

III. ஆறுமுக நாவலரின் சமயப்பணிகளைச் சுருக்கமாக விளக்குக.

07. மேல்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

I. சைவவித்தியா விருத்திச் சங்கம்

II. அன்னதானத்தின் சிறப்பு

III. சைவநாற்பாதங்கள்

IV. நயினை நாகபூசணி அம்மன் ஆலயம்.